திருத்தப்பட்டது

செ.வெ.எண்.171 நாள் : 22.12.2016

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வர்தா புயலினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

********

பெருநகர சென்னை மாநகராட்சியில் வர்தா புயலினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ,ஆ,ப., அவர்கள் மற்றும் மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக நியமிக்கப்பட்ட 15 இந்திய ஆட்சி பணி நிலையிலான அலுவலர்களுடன் இன்று **(22.12.2016)** ரிப்பன் மாளிகையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தெரிவிக்கையில், வர்தா புயலினால் மண்டல வாரியாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், அதைத் தொடர்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும், பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பணியாளர்களை பயன்படுத்தும் விதம் குறித்தும், புயலினால் சாய்ந்துள்ள மீண்டும் துளிர்க்க வாய்ப்புள்ள மரங்களைக் கண்டறிந்து அதனைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், உடனடியாக விழுந்த மற்றும் சாய்ந்த மரங்களுக்கு பதிலாக புதிதாக மரக்கன்றுகளை நடவு செய்திடவும், தற்காலிக குப்பைக் கொட்டும் இடங்களிலிருந்து விரைவாக மரக்கழிவுகளை மறுசுழற்சிக்கு பயன்படுத்தி, மீதமுள்ள மரக்கழிவுகளை அப்புறப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், சுகாதாரத்துறை மூலம் தொற்றுநோய் தடுப்பு முகாம் தொடர்ந்து நடத்திடவும், கொசு ஒழிப்பு மருந்து மற்றும் பிளீச்சிங் பவுடர் தெளித்திடவும், குடிநீரை முறையாக பரிசோதித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்திடவும், அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து விரைவாக பணியாற்றி பொதுமக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றிட வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்தார்.

ஆய்வின்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மை செயலாளர் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர்களிடம் கீழ்க்கண்ட பணி முன்னேற்றத்தினை தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் நீலம் புயல் சென்னையை தாக்கியபோது 960 மரங்கள் தான் விழுந்தன. தற்போது 12.12.2016 அன்று வர்தா புயல் கரையினை கடந்த பொழுது 130 கிலோ மீட்டர் வேகத்தில், 119 மி.மீ. மழையுடன் வீசிய புயல் காற்றினால், சாலையோரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்த காரணத்தினால், அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதனை சீர்செய்யும் பொருட்டு முதற்கட்டமாக சாலைகளில் விழுந்த மரங்கள் வெட்டப்பட்டு, சாலைகளின் ஓரத்தில் தள்ளப்பட்டது. மறுநாள் காலையிலிருந்து பேருந்துகள் செல்லும் வண்ணம் போக்குவரத்து சாலைகள் சீர்செய்யப்பட்டது.

அடுத்ததாக, சென்னை மாநகர் முழுவதும் உள்ள குடியிருப்புகளுக்கு மின்விநியோகம் வழங்கிட மின்விநியோகத்தினை சீர்செய்திடும் நோக்கில் மின் மாற்றி, துணை மின் நிலையம், மின் கம்பிகளில் விழுந்த மரங்கள் முன்னுரிமை கொடுக்கப்பட்டு மரங்கள் அகற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மின்வாரியத்தின் மூலம் மின்மாற்றிகள், மின்பகிர்மான பெட்டிகள், மின்கம்பிகள் ஆகியவற்றை சரிசெய்து குடியிருப்புகளுக்கு தடைப்பட்ட மின்விநியோகம் சீர்செய்யப்பட்டது.

காவல்துறை, போக்குவரத்து காவல்துறை ஆகியவற்றிடம் இருந்து அறிக்கைகள் பெற்று உட்புற சாலைகள் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டு சிற்றுந்துகள் செல்லுவதற்கும், போக்குவரத்து சீராக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது,

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியைச் சார்ந்த பணியாளர்களுடன் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பணியாளர்கள் இணைந்து பணியாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பிறமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பணியாளர்களில் சோர்ந்வடைந்த பணியளர்கள் திரும்பவும் அவர்களில் சொந்த மாவட்டத்திற்கு பத்திரமாக திருப்பி அனுப்பப்பட்டு, அதற்கு பதிலாக வேறு மாவட்டங்களிலிருந்து பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு பணிகள் துரிதமாக தொய்வின்றி நடைபெற்று வருகிறது.

வர்தா புயலினால் விழுந்த/சரிந்த மரங்களை அகற்றி பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை வளாகங்களுக்கு கொண்டு செல்வதற்காக ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்திடவும், விரைவாக மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காகவும், குப்பைகளோடு சேர்ந்து மரங்களும் வீணாவதை தவிர்ப்பதற்காகவும் தற்காலிக 78 குப்பை கொட்டும் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு மரக்கழிவுகள் கொட்டப்பட்டு வருகிறது.

வனத்துறை, தீயணைப்புத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சியை சேர்ந்த ஆயிரக்கணக்கான பணியாளர்கள் மூலம் நூற்றுக்கணக்கான மரஅறுவை இயந்தரங்களைக்கொண்டு சாலையில் விழுந்த மரங்கள் வெட்டப்பட்டன. இப்பணியினை மேலும் துரிதப்படுத்வதற்காகவும் ,விரைந்து பணிகளை மேற்கொள்வதற்காகவும் பிறத்துறையை சேர்ந்த நெடுஞ்சாலைத்துறை, தன்னார்வலர்கள் மற்றும் தன்னர்வு தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்களை இணைத்து மரங்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வரும் நிலையில் தனியார்கள் தங்களது வீடுகள், வணிகவளாகங்கள் மற்றும் அலுவலக வளாகங்களில் உள்ள மரக்கழிவுகளை தூய்மைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மீண்டும் கொட்டுவதினால் அப்புறப்படுத்தும் பணியில் சிறிது காலதாமாதம் ஏற்பட்டடாலும், பணியாளர்கள் மூலம் சாலைகளில் விழுந்த மரம் மற்றும் மரக்கழிவுகளை அகற்றும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மிக விரைவாக நடைபெற்று வருகிறது.

இந்திய அரசு நிறுவனமான மெட்டல் ஸ்க்ராப் டிரேடிங் கார்ப்பரேஷன் மற்றும் வனத்துறை மூலம் அகற்றப்பட்ட மரக்கழிவுகளை மதிப்பிடப்பட்டு வரும் சனிக்கிழமை (24.12.2016) அன்று ஏலம் விட்டு, திங்கட்கிழமை முதல் தற்காலிக குப்பை கொட்டும் வளாகங்களிலிருந்து மரங்கள் அகற்றப்படும். எஞ்சிய மரக்கழிவுகளை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்காலிக குப்பைக் கொட்டும் வளாகங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் திறந்த வெளி நிலங்கள், சாலையோரம் , விளையாட்டு மைதானங்கள் மற்றும் பிற இடங்கள் மரக்கழிவுகள் அகற்றப்பட்டபின் சீரமைக்கப்பட்டு, பழைய நிலையில் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்காலிக குப்பை கொட்டும் வளாகங்களில் அசாம்பாவிதமும் ஏதும் நடைபெறாமால் இருப்பதற்காகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மரங்கள் மற்றும் மரக்கழிவுகள் உள்ள தற்காலிக குப்பைக் கொட்டும் வளாகங்கள் தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறை மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மரங்கள் விழுந்த இடங்களில் பெருநகர சென்னை தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற புதியதாக மரக்கன்றுகள் நடுவதற்கு நிபுணர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுடன் விரிவான ஆலோசனை நடத்தி அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆய்விற்குபின் செய்தியாளர்களிடம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தெரிவிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சியினை வர்தா புயலின் தாக்கத்தில் இருந்து மீட்க தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளை மேற்கொண்டுள்ளது. 19,411 பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுடன், பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3,572 பணியாளர்கள் என மொத்தம் 22,983 பணியாளர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். புயலின்போது சாலைகளில் விழுந்த 17,157 மரங்கள் அகற்றும் பணியில் 565 மர அறுவை இயந்திரங்கள், 354 ஜே.சி.பி வாகனங்கள், 803 லாரிகள் ஆகியவற்றை பயன்படுத்தி அகற்றப்பட்டு வருகிறது. 16,070 மரங்கள் தற்பொழுது அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,087 மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. 558 பிரதான சாலைகளில் விழுந்த அனைத்து மரங்களும் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரமைக்கப்பட்டுள்ளது. புயலின்போது மரங்கள் விழுந்த 24761 உட்புறச்சாலைகளில் 23484

சாலைகளில் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டுள்ளது. இதுவரை சாலைகளில் விழுந்த 65,489.18 டன் மரக்கழிவுகள், 58,751.11 டன் குப்பைகள் என மொத்தம் 1,24,240.29 டன் மரக்கழிவுகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது. புயலினால் விழுந்த மரங்களுக்கு பதிலாக புதியதாக நான்கு மடங்குக்கு அதிகமாக மரங்களை நட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மழையினால் தொற்றுநோய் பரவாமல் தடுத்திட அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 545 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும், 420 அழுத்த தெளிப்பான்கள், 245 கையினால் இயக்கப்படும் தெளிப்பான்கள் மற்றும் 41 வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு 3,337 மலேரியா நோய் தடுப்பு பணியாளர்கள் மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வர்தா புயலின்போது பல்வேறு இடங்களில் பாதிக்கப்பட்ட 7,580 பொதுமக்கள் மீட்கப்பட்டு, 48 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இதுவரை பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு 6,44,017 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மீட்பு நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதால், விரைந்து அனைத்து பணிகளும் நிறைவு பெறும் என தெரிவித்தார்.

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தெரிவிக்கையில், புயலினால் சேதமடைந்த மற்றும் விழுந்த 54 மின்கோபுரங்களில் 38 மின்கோபுரங்களும், 29,907 மின்கம்பங்களில் 26789 மின்கம்பங்களும், 4500 மின்பகிர்மான பெட்டிகளும் 620 மின்மாற்றிகளும், 16200 கி.மீ. நீளமுள்ள மீன்கம்பிகளில் 14,250 கி.மீ. நீளமுள்ள மீன்கம்பிகளும் சீர்செய்யப்பட்டுள்ளது. சென்னைக்குட்பட்ட பகுதிகளில் 100 சதவீதமும், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் 99 சதவீதமும் குடியிருப்பு பகுதிகளில் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் சேதமடைந்த மற்றும் விழுந்த 2226 தெருவிளக்குகளில் 1643 தெருவிளக்குகளும், 6133 மின்கம்பங்களில் 4630 மின்கம்பங்களும் சீரமைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சராசரியான மின்நுகர்வு 3000 மெகாவாட்டில் தற்பொழுது 2966 மெகாவாட் மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 15000 பணியாளர்கள் மூலம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மின்வெட்டு என்ற நிலை இல்லை. சீரான வகையில் மின்விநியோகம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் போர்க்கால நடவடிக்கையால் வர்தா புயலின் பாதிப்பிலிருந்து சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ப. மகேஷ்வரி இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய் இ.ஆ.ப., அவர்கள், மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள், துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**